## .PRE-BOARD EXAMINATION-2, FEBRUARY-2020

**CLASS: X** **TAMIL** **Time: 3 hours**

**MAX. MARKS: 80**

***பிரிவு : அ - படித்தல்*** - 15
***பிரிவு : ஆ -எழுதுதல்*** - 14
***பிரிவு : இ -இலக்கணம்*** - 15
***பிரிவு : ஈ -இலக்கியம்/தமிழ்ப்பாடநூல்*** - 36

**பகுதி - அ (படித்தல்)**

1. **பின்வரும் பகுதியைப் படித்துக் கொடுக்கப்பட்ட பலவுள் தெரிவுசெய் வினாக்களுக்கு ஏற்ற விடை எழுதுக.** 5

தென் இந்தியாவின் பல முக்கிய ஆறுகள் மேற்குத் தொடர்ச்சி மலைப்பகுதிகளில் உருவாகுகின்றன. இங்கு உருவாகி கிழக்கு நோக்கி தக்காண பீடபூமி வழியாகப் பாய்ந்து வங்காள விரிகுடா வில் கலக்கும் முக்கியமான ஆறுகள் சில கோதாவரி, கிருஷ்ணா, காவிரி மற்றும் தாமிரபரணி. கோவையில் சிறுவாணி "உலகின் இரண்டாம் சுவைமிகு நீர்". பவானி, நொய்யல் என நதிகள் பிறக்கின்றன. இவை தவிர பல சிறு ஆறுகள் இம்மலைத்தொடரில் உருவாகி மேற்கு நோக்கிப் பாய்ந்து அரபிக்கடலில் கலக்கின்றன. புவியியல் ரீதியாக மேற்குத் தொடர்ச்சி மலைத்தொடர் அரபிக்கடலிற்கு அருகில் அமைந்துள்ளதால் மேற்கு நோக்கி பாயும் ஆறுகள் சிறிய ஆறுகளேயாகும். அவற்றுள் சில சிட்லாறு, பீமா ஆறு, மணிமுத்தாறு, கபினி ஆறு, கல்லாவி ஆறு, பெண்ணாறு மற்றும் பெரியாறு ஆகும்.

இந்த ஆறுகளின் குறுக்கே பல அணைகள் கட்டப்பட்டு பாசனத்திற்கும், சாகுபடிக்கும் மற்றும் மின்சாரம் தயாரிப்பதற்கும் உதவுகின்றன. மகராட்டினத்தில் உள்ள கோபாளி அணை, கோய்னா அணை, கேரளாவில் உள்ள பரம்பிகுளம் அணை, தமிழ்நாட்டில் உள்ள மேட்டூர் அணைக்கட்டு போன்றவை குறிப்பிடத்தகுந்தவைகளாகும்.

இம் மலைத் தொடரை உலகப் பாரம்பரியக் களங்களுள் ஒன்றாக ஐக்கிய நாடுகள் கல்வி, அறிவியல், பண்பாட்டு நிறுவனம் அறிவித்துள்ளது.

**வினாக்கள்** :

i. தென் இந்தியாவின் பல முக்கிய ஆறுகள் எங்கு உருவாகுகின்றன?
அ. மேற்குத் தொடர்ச்சி மலைப்பகுதிகளில்
ஆ. கிழக்கு தொடர்ச்சி மலைப்பகுதிகளில்
இ. தெற்கு தொடர்ச்சி மலைப்பகுதிகளில்
ஈ. வடக்கு தொடர்ச்சி மலைப்பகுதிகளில்

ii. உலகின் இரண்டாம் சுவைமிகு நீர் கிடைக்கும் இடம்?

அ. சிட்லாறு ஆ. சிறுவாணி

இ. மணிமுத்தாறு ஈ. பெரியாறு

iii. புவியியல் ரீதியாக மேற்குத் தொடர்ச்சி மலைத்தொடர் எந்த கடலுக்கு அருகில் அமைந்துள்ளது?

அ. வங்காள விரிகுடா ஆ. இந்திய பெருங்கடல்

இ. அரபிக்கடலிற்கு ஈ. பெருங்கடல்

iv. எந்த மலைத் தொடரை உலகப் பாரம்பரியக் களங்களுள் ஒன்றாக ஐக்கிய நாட்டு கல்வி, அறிவியல், பண்பாட்டு நிறுவனம் அறிவித்துள்ளது.

அ. வடக்கு தொடர்ச்சி மலைப்பகுதிகளில்

ஆ. கிழக்கு தொடர்ச்சி மலைப்பகுதிகளில்

இ. மேற்குத் தொடர்ச்சி மலைப்பகுதிகளில்

ஈ. தெற்கு தொடர்ச்சி மலைப்பகுதிகளில்

v. ஆறுகளின் குறுக்கே பல _______ கட்டப்பட்டு பாசனத்திற்கும், சாகுபடிக்கும் மற்றும் மின்சாரம் தயாரிப்பதற்கும் உதவுகின்றன.

அ. கற்கள் ஆ. பாலங்ள்

இ. கட்டிடங்கள் ஈ. அணைகள்

2. **பின்வரும் பகுதியைப் படித்துக் கொடுக்கப்பட்ட பலவுள் தெரிவுசெய் வினாக்களுக்கு ஏற்ற விடை எழுதுக.** 5

**இந்தியா**, தெற்காசியாவில் உள்ள ஒரு குடியரசு நாடாகும். இந்திய துணைக்கண்டத்தின் பெரும் பகுதியைத் தன்னுள் அடக்கியுள்ளது. இந்தியா என்ற பெயர் சிந்து நதியின் பெயரிலிருந்து பெறப்பட்டது. இந்தியப் பெருநிலம் தெற்கே இந்தியப் பெருங்கடல், மேற்கே அரபிக் கடல், கிழக்கே வங்காள விரிகுடா ஆகியவற்றைக் கொண்டுள்ளது. இதன் எல்லை நாடுகளாக மேற்கே பாக்கிஸ்தான், வடக்கே பூட்டான், மக்கள் சீனக் குடியரசு, நேபாளம், கிழக்கே வங்காளதேசம், மியான்மர் ஆகியவை அமைந்துள்ளன. இலங்கை, மற்றும் மாலத்தீவு ஆகிய நாடுகள் இந்தியப் பெருங்கடலில் இந்தியப் பெருநிலம், மற்றும் இலட்சத் தீவுகளுக்கு அண்மையில் அமைந்துள்ளன. அந்தமான் நிக்கோபார்தீவுகள், தாய்லாந்து, இந்தோனேசியாவின் சுமத்திரா ஆகியவற்றுடன் கடலில் கடல் எல்லையைக் கொண்டுள்ளன. பரப்பளவில் இந்தியா ஏழாவது இடத்தில் உள்ள நாடு.

பொருளாதாரத்தில் பொருள் வாங்குதிறன் சமநிலை அடிப்படையில் நான்காவது இடத்தில் இருக்கின்றது. உலகின் பண்டைய நாகரிகங்களில் இந்தியாவும் ஒன்று ஆகும். சிந்து சமவெளி நாகரிகம் அல்லது ஹரப்பா-மொகஞ்சதாரோ என்று அழைக்கப்படும் நாகரிகம் இங்கு தோன்றியது ஆகும்.

இந்து சமயம், புத்தம், சமணம், மற்றும் சீக்கியம் ஆகிய நான்கு தலைமை மதங்கள் இந்தியாவில் தோன்றின. பதினேழாம் நூற்றாண்டில் ஐரோப்பிய நாடுகளினால் கைப்பற்றப்பட்டு, 1947, ஆகத்து 15 அன்று விடுதலை பெற்றது. பின்னர் 1950, சனவரி 26 அன்று குடியரசாக அறிவிக்கப்பட்டு உலகின் மிகப்பெரிய குடியரசு நாடாகத் திகழ்கிறது.

**வினாக்கள்:**

i. இந்தியா என்ற பெயர் எதிலிருந்து பெறப்பட்டது?

அ. கங்கா நதி

ஆ. சிந்து நதியின்

இ. யமுனா நதி

ii. பொருளாதாரத்தில் பொருள் வாங்குதிறன் சமநிலை அடிப்படையில் ___________ இடத்தில் இருக்கின்றது.

அ. ஆறாவது

ஆ. நான்காவது

இ. ஐந்தாவது

iii. சிந்து சமவெளி நாகரிகம் அல்லது ஹரப்பா-மொகஞ்சதாரோ என்று அழைக்கப்படும் நாகரிகம் எங்கு தோன்றியது?

அ. இந்தியா

ஆ. வங்காளம்

இ. திபெத்

iv. பரப்பளவில் இந்தியா _________ இடத்தில் உள்ளது?

அ. ஐந்தாவது

ஆ. ஆறாவது

இ. ஏழாவது

v. இந்தியா எந்த ஆண்டு ஐரோப்பிய நாடுகளினால் கைப்பற்றப்பட்டது?

அ. பத்தொன்பதாம் நூற்றாண்டில்

ஆ. பதினாறாம் நூற்றாண்டில்

இ. பதினேழாம் நூற்றாண்டில்

3. **பின்வரும் பகுதியைப் படித்து, அதனை மூன்றில் ஒரு பங்காகச் சுருக்கி எழுதுக.** 5

உலகிலேயே ஒப்பற்ற மிகப்பெரிய, மிகவுயர்ந்த, மலைத்தொடர் இந்த இமயமலைத் தொடர்தான். இமயமலைத்தொடர் உலகின் சில மிக உயர்ந்த சிகரங்களின் இருப்பிடமாகும். இதில் எவரெஸ்ட் சிகரமும் ஒன்றாகும். எப்பொழுதும் உறைபனி மூடி இருக்கும். இந்திய துணைக்கண்டத்தின் வட எல்லையாக அமைந்துள்ளது. இது மேற்கே காஷ்மீர்-சிங்காங் பகுதி முதல் கிழக்கே திபெத்-அருணாசல பிரதேசம் பகுதி வரை நீண்டு இருக்கிறது. இமயமலைத்தொடரில் நூற்றுக்கு மேற்பட்ட சிகரங்கள் உள்ளன. இதில் சிலவற்றின் உயரம் 7200 மீட்டருக்கு மேலாகும். இதற்கு மாறாக, ஆசியாவுக்கு வெளியே உள்ள மிகப்பெரிய சிகரம் அக்கோன்காகுவா அன்டேஸ் மலைத்தொடரில் உள்ளது. இதன் உயரம் 6961 மீட்டராகும்.

மூன்று இணையான உப தொடர்களைக் கொண்டுள்ள இது ஐந்து நாடுகளில் பரவியுள்ளது.பூடான், இந்தியா, நேபாளம், சீனா மற்றும் பாகிஸ்தான் என்பனவான அவற்றில் முதல் மூன்று நாடுகளில் அதிகமான மலைத்தொடர் பரவியுள்ளது.[2] இமயமலையின் வடக்கே திபத்திய பீடபூமியையும், வடமேற்கே காரகோரம் மற்றும் இந்துக்குசு மலைத்தொடரையும் தெற்கே சிந்து-கங்கை சமவெளியையும் எல்லையாகக் கொண்டுள்ளது. உலகின் சில பெரிய நதிகளான சிந்து, கங்கை, மற்றும் பிரமபுத்திரா உற்பத்தியாகிறது. இந்நதிகளின் மொத்த வடிகால் 60 கோடி மக்களின் இருப்பிடமாகும். இமயமலை

தெற்காசிய மக்களின் கலாச்சாரத்தை வடிவமைத்துள்ளது. இமயமலையில் உள்ள பல சிகரங்கள் இந்து மற்றும் புத்த மதங்களில் புனிதமாகக் கருதப்படுகிறது.

இமயமலையின் தனித்துவமான தாவர மற்றும் விலங்கு செல்வம் காலநிலை மாற்றம் காரணமாகக் கட்டமைப்பு மற்றும் இயைபு மாற்றங்கள் நடைபெற்றுவருகின்றன. வெப்பநிலை அதிகரிப்பு காரணமாகப் பல இனங்கள் உயரமான இடங்களுக்குச் சென்று உயிர் வாழ்கின்றன. கர்வால் இமயமலை பகுதியில் கருவாலி மரங்கள் இருந்த இடத்தில தேவதாரு மரங்கள் வளர்கின்றன. சில மர இனங்களில் குறைந்த காலத்திலேயே பூத்தலும் பழுத்தலும் நிகழ்கின்றன.

## பகுதி - ஆ (எழுதுதல்)

4. அ. "பள்ளியைத் தூய்மையாக வைத்திருத்தல்" - குறித்த செயல்திட்ட வரைவு முறை ஒன்றை உருவாக்கி தலைமை ஆசிரியரின் ஒப்புதலுடன் நடைமுறைப்படுத்துக. 6

(அல்லது)

ஆ. கணினி இயக்குனர் பதவிக்கு விண்ணப்பப் படிவம்தயாரித்து எழுதுக.

(அல்லது)

இ. புயலால் விழுந்த மரங்களை அகற்றக்கோரி மாநகராட்சி ஆணையருக்கு ஒரு விண்ணப்பம் எழுதுக.

5. **பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒரு பகுதியின் குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதுக.** 8

அ) அறவியல் இயந்திரங்கள் - வியத்தகு சாதனைகள் - அவசியம் - பயன்பாடு - நன்மைகள் - தீமைகள் - விழிப்புணர்வு.

(அல்லது)

ஆ) அ) முன்னரை - சுத்தம் - சுகாதாரம் - ஆரோக்கியமான வாழ்வு - வளமான சமுதாயம் - முடிவுரை.

## பகுதி - இ (இலக்கணம்)

6. **சான்று தருக:** (எவையேனும் மூன்றனுக்கு விடையளி)

3

i. இன்னிசை அளபெடை

அ. உரனசைஇ ஆ. கெடுப்பதூஉம் இ. ஆஅளிய ஈ. கெட்டார்க்கு

ii. மலர்க்கை

அ. வினைத்தொகை ஆ. வேற்றுமைத்தொகை இ. உம்மைத்தொகை ஈ. உவமைத்தொகை

iii. எனக்கு எழுதித் தருவாயா? என்ற வினாவிற்கு எனக்கு யார் எழுதித் தருவார் என்று விடையளிப்பது

அ. வினா எதிர்வினாதல் விடை ஆ. நேர் விடை

இ. இனமொழி விடை ஈ. மறைவிடை

iv. தனிமொழி

அ. சென்ற கோதை **ஆ.** அந்தமான் இ. வந்தான் பாரி ஈ. கண்ணா வா!

v. கருவிளம்

அ. கருவியும் ஆ. காலமும் இ. செய்கையும் ஈ. செய்யும்

7. **நிரப்புக**: (எவையேனும் மூன்றனுக்கு விடையளி) 3

i. மருதம் நிலத்திற்குரிய தெய்வம் _________ .
அ. முருகன் ஆ.திருமால் இ. இந்திரன்

ii. சாலப்பேசினார் என்பது ________ எனப்படும்.
அ. எழுவாய்த்தொடர் ஆ. விளித்தொடர் இ. உரிச்சொற்றொடர்

iii. உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு. - இக்குறளில் அமந்துள்ள அணி எது?
அ. தற்குறிப்பேற்ற அணி ஆ. உவமையணி இ. எடுத்துக்காட்டு உவமையணி

iv. நிரைகவர்தல் என்பது _________ திணை?
அ. காஞ்சி ஆ. வஞ்சி இ. வெட்சித்திணை

v. முதுவேனில் என்பது ______________.
அ. ஆவணி, புரட்டாசி
ஆ. ஆனி, ஆடி
இ. மார்கழி, தை

8. **கூறியவாறு செய்க:** (எவையேனும் மூன்றனுக்கு விடையளி) 3

i. வேந்தர் (அளவுப் பண்புத்தொகையாக்குக)
அ. வாள்வேந்தர் ஆ. பெருவேந்தர் இ. மூவேந்தர் ஈ. சிற்றரசர்

ii. அறனீனும் (அசை பிரித்து வாய்பாடு கூறு)
அ) நிரை நேர் நேர் - புளிமாங்காய் ஆ) நேர் நேர் நேர் - தேமாங்காய்
இ) நிரை நிரை நேர் - கருவிளங்காய் ஈ) நேர் நிரை நேர் - கூவிளங்காய்

iii. படித்தல் (வினையாலனையும் பெயராக மாற்றுக)
அ) படித்தவர் ஆ) படி இ) பாடிய ஈ) பாட்டு

iv. ஆடு - தொழிற் பெயராக்குக.
அ. ஆடாமை ஆ. ஆடி இ. ஆடுதல்
ஈ. ஆடு

v. தமிழ்தேன் - உருவகத்தை உவமையாக மாற்றி எழுதுக.
அ. தமிழாகியத்தேன் ஆ. தேன்தமிழ் இ. தென்தமிழ் ஈ. தேந்தமிழ்

9. **இலக்கணக்குறிப்பு:** (எவையேனும் மூன்றனுக்கு விடையளி) 3

i. உரைத்தல்
அ) தொழிற்பெயர் ஆ) வினையாலணையும் பெயர்
இ) எதிர்மறைத் தொழிற்பெயர் ஈ) வினைமுற்று

ii. கண்ணன் எங்கே இருக்கிறார்? என்ற வினாவிற்கு கண்ணாடி பைக்குள் இருக்கிறது என்று விடையளித்தல்?
அ. வினா வழு ஆ. விடைவழு இ. திணை வழு ஈ. கால வழு

iii. விரும்பிய - பகுபத உறுப்பிலக்கணம் தருக.

iv. மலைந்து - பகுபத உறுப்பிலக்கணம் தருக.

v. ‘கொல்யானை’ - இதன் இலக்கணக்குறிப்பு யாது?
அ. பண்புத்தொகை ஆ. வேற்றுமை
இ. முற்றும்மை ஈ. பெயர்ச்சொல்

10. **சரியான தொடரைத் தேர்வு செய்க:** (எவையேனும் மூன்றனுக்கு விடையளி) 3

i. காலப்போக்கில் மருவி மாறி வருபவை ___________.
அ. இலக்கணப் போலி ஆ. மரூஉ
இ. எழுத்துப் போலி ஈ.காலப்பெயர்

ii. அ. செய்யுளை அழகு படுத்த வருவது சொல் இலக்கணம்.
ஆ செய்யுளை அழகு படுத்த வருவது பொருள் இலக்கணம்
இ. செய்யுளை அழகு படுத்த வருவது அணி இலக்கணம்
ஈ. செய்யுளை அழகு படுத்த வருவது யாப்பு இலக்கணம்

iii. அ) விளியுடன் வி**னை தொ**டர்வது எழுவாய்த்**தொ**டர்.
ஆ) விளியுடன் வி**னை தொ**டர்வது பண்புத்**தொ**டர்.
இ) விளியுடன் வி**னை தொ**டர்வது **பெயரெச்சதொடர்**
ஈ) விளியுடன் வி**னை தொ**டர்வது விளித்**தொ**டர்.

iv. இருநாட்டு அரசர்களும் தும்பைப்பூவைச் சூடிப் போரிடுவதன் காரணம்?
அ. நாட்டைக் காப்பாற்றுதல்
ஆ. ஆநிரை கவர்தல்
இ. வலிமையை நிலைநாட்டுதல்
ஈ. கோட்டையை முற்றுகையிடல்

v. அ. நேர் நேர் நிரை - கருவிளங்கனி
ஆ. நிரை நேர் நிரை - தேமாங்கனி
இ. நிரை நிரை நிரை - புளிமாங்கனி
ஈ. நேர் நிரை நிரை - கூவிளங்கனி

## <u>பகுதி - ஈ இலக்கியம் /தமிழ்ப்பாடநூல்</u>

11. **பின்வரும் உரைநடைப் பகுதியைப் படித்து அதன் அடியிற் காணும் வினாக்களுக்கு விடை தருக.** 5

தமிழும் பற்றிய கனவு: **1947,** ஆண்டு ஆகஸ்ட் பதினைந்தாம் நாளன்று சென்னை மாநகரில் விடுதலை விழாக் கொண்டாடி முடிந்ததும் மறுநாள் காலை நாங்கள் ஒரு குழுவாக வடக்கெல்லைக்குச் சென்றோம். இதுவே வடக்கெல்லை மீட்சிக்கான முதல் முயற்சியாக அமைந்தது. ஆசிரியர் மங்கலங்கிழார் என்ற சுமார் 55 வயதுடைய பெரியாரின் அழைப்பின் மீதே நாங்கள் வடக்கெல்லைக்குச் சென்றோம். அவர் சிறந்த தமிழறிஞர். இந்திய விடுதலைக்குப் பிறகு மாநிலங்களை மொழிவாரியாகப் பிரித்தனர். அப்போது, ஆந்திரத் தலைவர்கள் சித்தூர் மாவட்டம் முழுவதையும் புதிதாக அமையவிருக்கும் ஆந்திர மாநிலத்துடன் இணைக்க விரும்பினர். அச்சூழலில் வடக்கெல்லைத் தமிழ் மக்களை ஒருகினைத்துத் தமிழுணர்வு கொள்ளச் செய்தவர் தமிழாசான் மங்கலங்கிழார். அவருடன் இணைந்து, தமிழரசுக் கழகம் சென்னையிலும்

திருத்தணியிலும் தமிழர் மாநாடு நடத்தியது. போராட்டத்தில் ஈடுபட்டு இராஜமுந்திரி சிறையிலிருந்த திருவாலங்காடு கோவிந்தராசன், பழனி சிறையிலிருந்த மாணிக்கம் ஆகிய இருவரும் சிறையிலேயே உயிர் துறந்தனர்.

**வினாக்கள்:**

i. சென்னை மாநகரில் விடுதலை விழாக் கொண்டாடி முடிந்ததும் மறுநாள் காலை ாங்கள் ஒரு குழுவாக எங்கு சென்றோம் என ஆசிரியர் கூறுகிறார்?
அ. தெற்கெல்லை
ஆ. மேற்கெல்லை
இ. வடக்கெல்லைக்கு

ii. தமிழ் மக்களை ஒருகினைத்துத் தமிழுணர்வு கொள்ளச் செய்தவர் யார்?
அ. தமிழாசான் மங்கலங்கிழார்
ஆ. தமிழகனார்
இ. மாணிக்கம்

iii. இந்திய விடுதலைக்குப் பிறகு மாநிலங்களை எவ்வாறு பிரித்தனர்.
அ. மாநிலவாரியாக
ஆ. நிலவாரியாக
இ. மொழிவாரியாகப்

iv. ஆந்திரத் தலைவர்கள் ________ மாவட்டம் முழுவதையும் புதிதாக அமையவிருக்கும் ஆந்திர மாநிலத்துடன் இணைக்க விரும்பினர்.
அ. சித்தூர்
ஆ. புத்தூர்
இ. காட்டூர்

v. ஆசிரியர் மங்கலங்கிழார் சிறந்த ____________ .
அ. தமிழறிஞர்
ஆ. தமிழாசிரியர்
இ. தமிழிலக்கியவாதி

12. **பின்வரும் செய்யுள் பகுதியைப் படித்து அதன் அடியிற் காணும் வினாக்களுக்கு விடை தருக.** 4

புண்ணியப் புலவீர் யான் இப்போழ்து இடைக் காடனார்க்குப்
பண்ணிய குற்றம் எல்லாம் பொறுக்க எனப் பரவித் தாழ்ந்தான்
நுண்ணிய கேள்வி யோரும் மன்னநீ நுவன்ற சொல்லாம்
தண்ணிய அமுதால் எங்கள் கோபத்தீத் தணிந்தது என்னா.

**வினாக்கள்:**

i. இச்செய்யுளடிகள் இடம் பெற்ற நூலின் பெயர்?
அ. திருவிளையாடற்புராணம் ஆ. நன்னூல்
இ. முலைப்பாட்டு ஈ. கம்பராமாயணம்

ii. நுவன்ற என்பதன் பொருள் என்ன?
அ. சொல்லிய ஆ. தூவி இ. சாமரை ஈ. உலகம்

iii. இப்பாடலின் ஆசிரியர் யார்?
அ. கீரந்தையார் ஆ. பரஞ்சோதி முனிவர் இ. நப்பூதனார் ஈ. கம்பர்

iv. குற்றம் எல்லாம் பொறுக்க எனக் கூறியவர்?
அ. இடைக்காடனார் ஆ. பாண்டிய மன்னன் இ.இறைவன்
ஈ. இப்பாடலின் ஆசிரியர்

13. **பின்வரும் குறட்பாக்களைச் சரியான சீர்களால் நிரப்புக:** 2

i. ____________ பகைகொளலின் ____________ தீமைத்தே
ல்லார் தொடர்கை விடல்.

ii. ாள்தொறும் நாடி ________________ மன்னவன்
ாள்தொறும் நாடு _________ .

14. **எவையேனும் இரண்டு செய்யுள் வினாக்களுக்கு விடையளி:** 8

i. இராசராசன் காக்கும் திருநாட்டின் இயல்புகள் யாவை?

ii. முல்லைப் பாட்டில் உள்ள கார்காலச் செய்திகளை விவரித்து எழுதுக?

iii. 'மாளாத காதல் நோயாளன் போல்' என்னும் தொடரிலுள்ள உவமை சுட்டும் செய்தியை விளக்குக?

iv. கோசல நாட்டின் இயற்கை வளத்தையும் நாட்டு வளத்தையும் குறித்து எழுதுக?

15. **எவையேனும் இரண்டு உரைநடை வினாக்களுக்கு விடையளி.** 10

i. ம.பொ.சி அவர்கள் ஆறுமாதம் கடுங்காவல் தண்டனை பெற்றதற்கு காரணம் என்ன?

ii. தெருக்கூத்து குறித்தும் எழுதுக?

iii. காற்று பேசியதைப் போல நிலம் பேசுவதாக எண்ணிக் கொண்டு உனது சொந்த வரியில் சில கருத்துகளை எழுதுக?

iv. சங்க இலக்கியங்கள் காட்டும் அரண்கள் இன்றைக்கும் தேவையானவையே என்பதற்குச் சில எடுத்துக்காட்டுகள் தருக.

16. **ஏதேனும் ஒன்றனுக்கு மட்டும் விடையளி.** (துணைப்பாடம்)

அ. **மங்கையராய் பிறப்பதற்கே** - என்னும் விரிவனாத்தில் உனக்கு பிடித்த கதாப்பாத்திரங்களை எழுதுக. 7

(அல்லது)

ஆ. புதிய நம்பிக்கை - என்னும் கதையை கருப்பொருள் மாறாமல் எழுதுக

~~<><>~~